பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 16 சனிக்கிழமை (2-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 6

### யாழ். நகரின் மையப் பகுதியை நோக்கி

# இரு முனைகளில் முன்னேற முயலும் படையினருடன் புலிகள் கடும் சமர்!

## 15 சிப்பாய்கள் பலி! 100 பேர் காயம்!!

சாவகச்சேரி, டிசம்பர் 2

யாழ். நகரின் மையப் பகுதியை நோக்கி இருமுனைகளில் முன்னேறும் முயற்சியை படையினர் நேற்று அதிகாலை முதல் பெரும் எடுப்பில் ஆரம்பித்துள்ளனர்.

நல்லூர் பகுதியிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாகவும் — கந்தர்மடம் பகுதியில் இருந்து பலாலி வீதி வழியாகவும் இரு முனைகளில் ஆரியகுளம் பகுதியை நோக்கி முன்னேறப் பிரயத்தனம் செய்து வரும் படையணிகளை வழிமறித்து விடுதலைப் புலிகள் கடும் சமர் புரிந்து வருவதாக களச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று அதிகாலை படையினர் தங்கள் முன்னேற்ற முயற்சியை ஆரம்பித்ததுமே விடுதலைப் புலிகளின் பதில் தாதகுதல்கள் தீவிரமடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

நேற்றைய சமரில் படையினருக்குப் பேரிழப்பு ஏற்பட்டிருக்கிறது

யாழ். நகரை நோக்கி மிகக் கடுமையான பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு படையினர் தமது முன்னேற்ற முயற்சியைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

நேற்று மூண்ட கடும் சமரினால் யாழ். நகரப் பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி கிழக்கில்

## மண்மீட்புப் போரில் 4 மாணவர் இணைவு

செம்பியன் பற்று, டிச. 2

வடமராட்சி கிழக்கில் நான்கு மாணவர்கள் கடந்த புதன்கிழமை மண் மீட்புப் போரில் தம்மை இணைத்துக் கொண்டார்.

செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையை சேர்ந்த ஆண்டு 11 மாணவி செல்வி. சோ. சியாமளா,

மருதங் கேணி இந்து வித்தியாயலயத்தைச் சேர்த்த ஆண்டு 10, மாணவன் கை. கெங்காதரன்.

ஆண்டு 9 மாணவன் செ. மயூரன

உடுத்துறை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த க. நீகன் ஆகியோரே மண் மீட்புப் போரில் தம்மை இணைத்துக் கொண்ட நான்கு மாணவர்களும் ஆவர்.

இவர்களுடன் வேறும் பல இளைஞர்களும் யுவதிகளும் மாமுனையில் உள்ள புதிய போராளிகள் இணையும் செயலகத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

### வடமராட்சி நோக்கி ஷெல்

வடமராட்சி, டிச. 2

வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

காலை 4.55 மணியளவில் இரு ஷெல்கள் கற்கோவளம் மூர்க்கம் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. இதேபோன்று காலை 6.30 மணியளவில் கம்பர்மலைப் பகுதியை அண்டிய பகுதிகளில் இரு ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

இவை வெற்றுக் காணிகளிலேயே வீழ்ந்து வெடித்தன. (இ-173)

## ஷெல் மழையால் சேதமடைந்து காட்சி தரும் நகரப் பகுதி வீடுகள்!

### ஈச்சமோட்டையில் இருந்து மீட்கப்பட்ட வயோதிபர் தகவல்

சாவகச்சேரி, டிச. 2

படையினரின் அகோர பீரங்கித் தாக்குதல்களினால் யாழ். நகரை அண்டிய வீடுகள் அனைத்துமே சேதமடைந்துள்ளன. பெருப்பாலான வீடுகள் கூரையின்றி காணப்படுகின்றன.

காயமடைந்த நிலையில் யாழ். ஈச்சமோட்டைப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளால் மீட்டுவரப்பட்ட இராயப்பு அந்தோனிப்பிள்ளை (வயது 72) என்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி ஈச்சமோட்டைப் பகுதியில் சூட்டுக்கு இலக்காகி கையில் காயமடைந்த இவர் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பெரும் போர்க்களமாக மாறியுள்ள யாழ். நகரை அண்டிய பகுதியில் தனித்து விடப்பட்ட அவர் அங்கு தமக்கு நேர்ந்த திகில் அனுபவங்களை ''உதயன்'' செய்தியாளரிடம் விவரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உறவினர்கள் அனைவரும் வீட்டில் இருந்து வெளியேறிய பின் நான் அங்கு தனித்து தங்கி இருந்தேன்.

விடுதலைப்புலிகளும், படையினரும் அடிக்கடி மோதிக் கொள்ளும்போது அகோர ஷெல் சத்தங்கள் காதைப் பிளக்கும். ஷெல்கள் முதலில் எனது வீட்டுக்கு மேலாக அடுத்தடுத்து கூவிச் சென்று வெடித்தன.

அவ்வேளைகளில் எல்லாம்

( 5ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் தமிழர் கைது

கொழும்பு, டிச. 2

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்கள் கைதாவதை உடன் நிறுத்த ஆவனசெய்யுமாறு பிரதி பாதுகாப்பு அமைச்சரிடம் முறையிடப் பட்டுள்ளது. (இ-3)

## படையினரின் ரோந்து பஸ் குண்டு வைத்து தகர்ப்பு!

### களுவாஞ்சிக்குடியில் சம்பவம்

களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்துக்கு அருகே வைத்து படையினர் பயன்படுத்தும் பஸ் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

இராணுவத்தினரும், பொலீஸாரும் இரவு ரோந்துக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமாவின் பாதுகாப்புக்கு தினமும் 30 லட்சம் ரூபா!

### இந்திய அரசு செலவிடுகிறது

திருவனந்தபுரம், டிச. 2

ஆயுள்வேத வைத்திய சிகிச்சைக்காக கேரளாவில் தங்கியிருக்கும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அவரது பாதுகாப்புக்காக இந்திய அரசு நாளொன்றுக்கு 30 லட்சம் ரூபாவை செலவிடுவதாக ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கேரளத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் உள்ள ராஜ்பவனில் தங்கியுள்ள பிரதமர் ஸ்ரீமாவோவை கேரளா மாநில முதலமைச்சரைத் தவிர வேறு பிரமுகர்கள் சென்று பார்வையிடுவதையும் பாதுகாப்புப் பிரிவினர் தடைசெய்துள்ளனர்.

ஸ்ரீமாவோ அங்கு 20 நாள்கள் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## யாழ்ப்பாண சமர்க் களத்தில் பொஸ்னிய போர்க் காட்சிகள்!

### ஆவி நகரத்தில் சிக்குண்ட நிலையில் இராணுவம்

கொழும்பு, டிச. 2

யாழ்ப்பாணம் இப்போது ஓர் ஆவி உலகமாகவே காட்சியளிக்கிறது. இந்த ஆவி உலகப் பொறிக்குள் சிக்குண்ட நிலையிலேயே இராணுவத்தினர் உள்ளனர்.

விடுதலைப் புலிகள் நகரம் முழுவதிலும் விதைத்துள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள், பொறி வெடிகளுக்குள் சிக்கி எப்போது சாக நேரிடும் என்ற அச்சத்துடனேயே துருப்புகள் தமது முன்னேற்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரம் இப்போது கொங்கிறீட் காடாகவே காட்சியளிக்கிறது. வீடுகளுக்குள்ளும், ஒழுங்கைகளுக்குள்ளும் இப்போது நிற்கும் விடுகலைப் புலிகள் வெளியே வந்து மோதும் போது சண்டை மிக உக்கிரமடையும். இதனால் நகரின் மத்திய பகுதியின் புற எல்லைப் பரப்புக்குள் முன்னேறும் போது மிகவும் கவனமாக இருக்குமாறு துருப்புகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது — என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றும்போர்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய இராணுவ சேவைக்கு அமைச்சர்களின் விசேட குழு சிபார்சு

கொழும்பு, டிச. 2

ஸ்ரீலங்காவின் இளைஞர்களை கட்டாய இராணுவ சேவைக்கு அணிதிரட்ட வேண்டும் என்று எட்டு அமைச்சர்களைக் கொண்ட விசேட குழு அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்துள்ளது.

தனியார்துறையினர் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் அந்தக் குழு சிபார்சு செய்திருக்கிறது.

போர் நடைபெறாத இடங்களின் பாதுகாப்பைப் பேணுவது சம்பந்தமாக சிபார்சு செய்வதற்கென இந்த எண்மர் அமைச்சர் குழு நியமிக்கப்பட்டிருந்தது. பிரஸ்தாப விசேட குழு தனது அறிக்கையை கடந்த 22ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தது.

பல்கலைக்கழகத்தில் பட்டதாரிக் கல்வி பயில்வதற்குத் தெரிவு செய்யப்பட்டு அதற்காகக் காத்திருப்போரையும்—

ஜி.சி.ஈ. உயர்தர வகுப்புப் பயின்றுவிட்டு வேலையின்றிருக்கும் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட சகலரையும்—

கட்டாய இராணுவ சேவைக்கு அணிதிட்டவேண்டும்.

✱ ஜி.சி.ஈ. சாதாரன தரம் பயின்ற 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட சகலரையும்—

தொண்டர் மற்றும் உப படைகளில் கட்டாய சேவைக்கு அணிதிரட்ட வேண்டும்—என்று அமைச்சர்கள் விசேடகுழு சிபார்சு செய்திருக்கிறது.

★ போர் நடைபெறாத இடங்களில் இரவு 11 மணி தொடக்கம் அதிகாலை 3 மணிவரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்செய்ய வேண்டும் என்பதும் அமைச்சர்கள் விசேட குழு செய்த 13 சிபார்சுகளில் அடங்கும். (அ)

# யுத்தத்தை நிறுத்த கோரி கொழும்பில் ஊர்வலம்

## வாசுதேவ ஏற்பாடு

கொழும்பு, டிச. 2

யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி கொழும்பில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரை உடனடியாக நிறுத்தி வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் இன்னல்களை நீக்கி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த ஊர்வலம் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்து வரும் இரத்தினபுரி மாவட்ட எம்.பி. வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ஐ)

# இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களுக்கு சலுகை

கொழும்பு, டிச. 2

வடக்கு கிழக்கில் சிலபகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களுக்கு சலுகைகள் வழங்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இத்தகைய ஆசிரியர்கள் தாம் இருக்கும் இடத்துக்கு அருகில் உள்ள கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கல்வி அமைச்சு கோரியுள்ளது. (ஐ)

# தற்போதைய இராணுவ நடவடிக்கை மூலம் அரசு அரசியல் இலக்கை அடைவது கேள்விக்குறியே!

## பிரபல விமர்சகர் தராக்கி கருத்து

கொழும்பு, டிச. 2

அரசு தற்போது நடத்தி வரும் இராணுவ நடவடிக்கையின் அரசியல் குறிக்கோள் எந்தளவுக்கு நிறைவேறும் என்பது கேள்விக்குறியே.

பிரபல பத்திரிகையாளரும், இராணுவத்துறை ஆய்வாளருமான டி.சிவராம் (தராக்கி) இவ்வாறு கூறியிருக்கிறார்.

பி. பி. ஸி. யின் தமிழோசைக்கு அவர் நேற்று பேட்டியளித்தார்.

வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை குறித்து அவர் தெரிவித்ததாவது:–

எந்த ஒரு இராணுவ நடவடிக்கையும் அதன் இறுதி வெற்றியை அடைவதானால் அது அரசியல் ரீதியான வெற்றியாகவும் அமைய வேண்டும்.

அரசியல் ரீதியான வெற்றி என்பது குறித்த ஒரு பிரதேசம் மீட்கப்பட்டு அங்குள்ள மக்கள் அந்தப் பகுதியில் இருந்த போராளிக் குழுவிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டு தேர்தல்கள் நடத்தப்பட்டு சகஜநிலை தோன்றுவது போன்ற ஒரு நிலைமையைத் தோற்றுவிப்பது தான் ஒரு இராணுவ நடவடிக்கையின் அரசியல் குறிக்கோளாக இருக்க முடியும்.

அரசியல் குறிக்கோள் இல்லாத எந்த இராணுவ நடவடிக்கையும் முழுமையான இராணுவ நடவடிக்கையாக இருக்கமுடியாது.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் கைப்பற்றிய இடங்களில் பொது மக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

இராணுவம் இன்னமும் ஆகாய வழியாகவும், கடல் வழியாகவுமே தமது அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிலை உள்ளது.

விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் இந்த இரு வழிகளுக்கும் நெருக்கடி கொடுத்து வருகிறார்கள் என்பது இராணுவப் பேச்சாளர் கூறியதிலிருந்தே தெரிகிறது.

இராணுவ விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பார்த்தால்—

நாம் எந்தளவுக்கு ஓரிடத்தில் துருப்புக்களைக் கொண்டு போய் குவிக்கிறோம் என்பது அந்த இடத்துக்கு நாம் எந்தளவு இராணுவத்தளபாடங்களையும், உணவுப் பொருள்களையும் பாதுகாப்பாகக் கொண்டு செல்லமுடியும் என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்பட வேண்டியது.

இன்று யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட துருப்புக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் அவர்களுக்கான பொருள்களை (ஒரு சிப்பாய்க்கு சராசரி இரண்டு கிலோ உணவுப் பொருள்கள் நாளொன்றுக்குத் தேவை) கொண்டு செல்வதற்கான சக்தியை அரசு எந்தளவுக்கு கொண்டுள்ளது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது — என்றார். (ஐ)

# மண்ணெண்ணெய் கலந்த சீனி

சாவகச்சேரி, டிச. 2

மண்ணெண்ணெய் கலந்த சீனி சுகாதாரப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

உணவு மருந்துப் பரிசோதகர் திரு. த. மகாதேவன் தலைமையில் சென்ற சுகாதாரப் பகுதியினர் மண்ணெண்ணெய் கலந்த சீனியை பல இடங்களில் கண்டுபிடித்து விற்பனையை தடை செய்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூர் மூலப்பொருள்களில் தற்காலிக மலகூடங்கள்

சாவகச்சேரி, டிச. 2

உள்ளூர் மூலப்பொருள்களைக்கொண்டு தற்காலிக மலசலகூடங்களை அமைக்கும் முறை ஒன்றை 'ஒக்ஸ் பாம்' தொண்டர் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

சாவகச்சேரிக்கு வந்திருந்த ''ஒக்ஸ்பாம்'' பிரதிநிதிகள் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நிலவும் சுகாதார நிலை குறித்து ஆராய்ந்தனர்.

இடம்பெயர்ந்தவர்களுக்கும், வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்குமாக மேலும்3 ஆயிரத்து 200 மலசலகூடங்கள் அவசரமாக அமைக்கப்பட வேண்டும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

'ஒக்ஸ்பாம்' அமைப்பு அறிமுகம் செய்துள்ள தற்காலிக மலசலகூடம் வரணி, இயற்றாலை குடியேற்றத் திட்டத்தில் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

தற்காலிக மலசல கூடம் அமைக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் ''ஒக்ஸ்பாம்'' அமைப்பு இணைந்து செயற்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் பரல்களுக்குப் பதிலாக பனை மட்டைகளைக்கொண்டு குழிகளை அமைத்து, அவற்றுக்குமேல் சிமெந்துக்குப் பதிலாக பலகைகளினால் செய்யப்பட்ட தட்டை வைத்து இந்தத் தற்காலிக மலகூடம் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


## தேடுகின்றோம்

வர்த்தலைவிளான், தெல்லிப்பளையைச் சேர்ந்தவரும், அண்மையில் கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமான

திருமதி சற்குணத்தை அவரது உறவினர் சு. நிஜந்தன் தேடுகிறார்.

தயவுசெய்து உடன் கடித மூலம் முகவரியைத் தெரியப்படுத்தவும்.

முகவரி:- சு. நிஜந்தன்,
C/o திரு. சி. தங்கத்துரை,
பொன்னம் தோட்டம்,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

[39431]

## உடன் சந்திக்கவும்

திருநெல்வேலி நேசிங்ஹோமுக்கு முன் வியாபாரம் செய்த சண்முகலிங்கம்

சாவகச்சேரி தேவேந்திரா தியேட்டரின் அருகாமை RMP மில்லில் கோண்டாவில் ஸ்கூட்டர் பாலாவை உடன் சந்திக்கவும்.

கோண்டாவில் இரத்தினம்

]39433]

## சந்திக்கவும்

நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடியை சேர்ந்த திரு. நாகேந்திரம் [திருமதி கமலாம்பிகை சாந்தலிங்கம் செட்டியாரின் பேரன்] அவர்களை உடனடியாக சந்திக்குமாறு வேண்டுகிறேன்.

திருமதி ப. சோமஸ்கந்தர்
(பிறவுண். வீதி, கொக்குவில்)

C/O இ. சந்திரமௌளீசன்
பாலமோகன் வீதி
சரசாலை தெற்கு
சாவகச்சேரி

(39435)

## மில்க்வைற் நீல சோப்

மில்க்வைற் நீல சோப் விற்பனையாகிறது

தொடர்பு

க. கனகராசா
மே/பா, தேவர்

கண்டி வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

(39436)


# ஷெல் மழையால் சேதமடைந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதுங்குகுழி ஒன்றினுள் பொழுதைக் கழிக்கவேண்டியிருந்தது.

கொழும்புத்துறைப் பகுதிக்கு முன்னேறி வந்த படையினர் ஈச்சமோட்டை உட்பட நகரின் தெற்குப்புற குடிமனைகள் மீது பீரங்கித் தாக்குதலை விடாமல் நடத்தினர்.

ஒரு நாள் எனது வீட்டின் மீது குண்டு விழுந்து வெடித்தது. திடீரென வீடு தீப்பற்றிக் கொண்டது. வீட்டின் பின்புறமாக வெளியே நின்றதால் நான் உயிர்பிழைத்தேன்.

குண்டு வெடித்ததும் வீட்டு ஜன்னல் கதவுகள் என்பன தூக்கி வீசப்பட்டன.

இனி உயிர் பிழைக்க வழியில்லை என்று எண்ணிக் கொண்டு பீதியுடன் அவ்விடத்தில் இருந்து வெளியேற முடிவு செய்தேன்.

எவராவது தென்படுகிறார்களா என்று தேடிப்பார்த்தேன். எவருமே கண்ணில் படவில்லை.

திடீரென எனது கையை துப்பாக்கி வேட்டு தாக்கியது. இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. எனது கதை முடிந்தது என்று எண்ணிய நான் யாராவது காயத்தை மறுகையால் பொத்திப் பிடித்தபடி எவராவது வருவார்களா என்று குரல் கொடுத்தேன்.

'தம்பி, தம்பி' என்று கத்திக் கொண்டு சிறிது தூரம் நடந்தேன்.

அப்போது அப்பகுதியில் காவலில் நின்ற புலி வீரர்கள் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். அவர்கள் என்னை அங்கிருந்து மீட்டுச் சென்று சிகிச்சை அளித்தனர். பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு என்னைக் கொண்டு வந்தனர்.

தக்க தருணத்தில் அவர்கள் என்னைக் காப்பாற்றியிருக்காவிடில் நான் இறந்திருப்பேன்.

இப்படி அவர் உணர்ச்சி மேலிட கூறினார்.

அங்கு ஏற்பட்டிருக்கும் சேதங்கள் பற்றி அவரிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:–

நகரின் தென் பகுதியில் பெரும்பாலான வீடுகள் படையினரின் பீரங்கித் தாக்குதலால் சேதமடைந்துள்ளன. அநேகமான வீடுகளும் கட்டடங்களும் கூரைப் பகுதி சேதமான நிலையில் வெறும் சுவர்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை, வளன்புரம், சுவாமியார் வீதி, குருநகர், ஐந்துமாடி ஆகிய இடங்களில் அனேகமாக முழு வீடுகளுமே சேதமடைந்துள்ளன.

தெருத் தெருவாக நாய்களும் கால்நடைகளும் இறந்து கிடக்கின்றன.

பாஷையூர் அந்தோனியார் கோவில் கூட சேதமடைந்துள்ளது. அப்பகுதியில் இன்னும் பல ஆலயங்களும் சேதமடைந்துள்ளன.

வரலாற்றுப் புகழ்மிக்க யாழ். நகரம் உடைத்து நொறுக்கப்பட்ட கலை வண்ணம் மிகுந்த ஒரு சிலையின் சிதைவுத் துண்டங்களாகக் காட்சியளிக்கிறது.

நான் ஈச்சமோட்டையில் தங்கியிருந்த போது விடுதலைப் புலிகளின் படையணிகள் அணிவகுத்துச் செல்வதை அடிக்கடி காண்பேன். அவர்களைக் காணும்போது என் உடலில் உற்சாகம் பிறக்கும். உணர்ச்சி மேலிடுகளத்தில் போராட வேண்டும் என்ற எண்ணம் எனக்கும் ஏற்படும். எப்படியாவது புலிகள் இந்த யுத்தத்தில் வெல்ல வேண்டும்.

—இப்படி உணர்ச்சி மேலிட கூறினார் அந்த வயோதிபர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய ராணுவ நடவடிக்கை இடையில் நிறுத்தப்படமாட்டாது

## அனுருத்த ரத்வத்தை கூறுகிறார்

கொழும்பு, டிச. 2

தற்போது குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை இடையில் நிறுத்தப்படமாட்டாது என்றும், ஒரு முடிவு காணப்படும் வரை அது தொடர்ந்து நடைபெறும் என்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

கொழும்பு பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு அன்பளிப்புப் பெற்றுக்கொள்வதற்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவத்தில் அவா உரை நிகழ்த்தினார்.

இந்த வைபவத்தில் மகா சங்கத்தினரும் தேசிய பாதுகாப்பு நிதிக்கு அன்பளிப்புகளை வழங்கினர்.

படையினரின் நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்கும், பொதுமக்களின் சொத்துக்களுக்கும் குறைந்த பாதிப்பே ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்.

அதேசமயம் யாழ்ப்பாணத்தில் படையினரின் ஷெல், பீரங்கித் தாக்குதல்களால் மக்களின் உடைமைகளுக்கு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டிருப்பதாக வேறு செய்திகள் தெரிவித்தன

(இ)

# கைதான கத்தோலிக்க மதகுருமார் குறித்து தெற்கில் விஷமப் பிரசாரம்

கொழும்பு, டிச. 2

வடக்கே வந்து கொண்டிருந்த சமயம் சமீபத்தில் தாண்டிக்குளத்தில் கைதான இரு கத்தோலிக்க மதகுருமார் குறித்தும் கொழும்பில் பத்திரிகைகள் விஷமப் பிரசாரம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கத்தோலிக்கரும் கத்தோலிக்க மதகுருவும் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் விதத்தில் தென்னிலங்கைப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

கத்தோலிக்க திருச்சபையை இக்கட்டான நிலைக்குள் தள்ளும் பத்திரிகைச் செய்திகள் வெளிவந்ததை அடுத்து அரசாங்கத்தின் நிலைமையை விளக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெகுஜன தொடர்பு சுற்றுலாத்துறை விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவைக் கேட்டிருந்தார்.

(இ)

# ஈழத்தமிழர் கொலையை நிறுத்துமாறு இலங்கையை ஐ. நா. கோர வேண்டும்

## மலேசிய மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை

'யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா அரச படைகளால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை தடுக்க ஸ்ரீலங்கா அரசை ஐ. நா. வலியுறுத்த வேண்டும்.''

மலேசியாவில் உள்ள மனித உரிமை அமைப்புக்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளன.

மனித உரிமை அமைப்புக்களைச்சேர்ந்த சுமார் ஆயிரம் தொண்டர்கள் நேற்று முன்தினம் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள ஐ. நா. சபை செயலகம் முன்னால் கூடி யாழ்ப்பாணத் தமிழர்களுக்காக குரல் எழுப்பினர்.

யாழ்ப்பாண மக்களின் பாதுகாப்பு தொடர்பாக ஐ. நா. அக்கறை கொள்ளவேண்டும் என்று கோரி மனித உரிமை அமைப்பு உறுப்பினர்களால் ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு மகஜர் அனுப்பப்பட்டது.

(இ-3)

# இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் விவரம்

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டங்களுக்கிடையேயான வருடாந்த ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரவுள்ள இந்த இடமாற்றத்தின் கீழ் 97 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுவேறு பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் — அவர்களின் தற்போதைய பாடசாலை — அவர்கள் இடமாற்றம் பெறும் கோட்டம் அல்லது மாவட்டம் வருமாறு:-

திருமதி அ. சிவராஜகுமார் — மல்லாவி ம.வி—வவுனியா மாவட்டம்.

செல்வி சு. மோகனராமச்சந்திரன் — புதுக்குடியிருப்பு. ம.வி.— திருகோணமலை மாவட்டம்.

ந. பார்த்தீபன் — புளியங்குளம் இந்துக் கல்லூரி — கோப்பாய்.

ப. ஜோதீஸ்வரன் — வவுனியா விக்னேஸ்வரா ம. வி. — கரவெட்டி.

செல்வி கு. சிவகாமி—புளியங்குளம் ம.வி. — சாவகச்சேரி.

செல்வி அ. சிவசாந்தினி— நெடுங்கேணி ம.வி. — சாவகச்சேரி.

ஏ. சிவானந்தமூர்த்தி — வவுனியா, பட்டிக்குடியிருப்பு அ.த.க.பா. — வலி. கிழக்கு.

செல்வி மு. தேவிவிமலா— நெடுங்கேணி ம. வி. — சாவகச்சேரி.

செல்வி க. செல்லையா — புளியங்குளம் இ.க. — யாழ்ப்பாணக் கோட்டம்.

செல்வி சு. கேமாவதி — பூநகரி செல்வியாதீவு அ.த.க.பா. — சாவகச்சேரி.

செல்வி செ. கந்தையா — தருமபுரம் ம. வி. — கரவெட்டி.

ப. யோகானந்தன் —முரசுமோட்டை முருகானந்தா ம.வி. — வவுனியா மாவட்டம்.

திருமதி இ. சந்திரபாலன்— முரசுமோட்டை அ.த க.பா. — முல்லைத்தீவு மாவட்டம்.

க. சிவபாலன் — கண்டாவளை நாகேஸ்வரி வித்தி — வவுனியா மாவட்டம்.

திருமதி ய. சண்முகம் — கரைச்சி மத்திய கல்லூரி — வவுனியா மாவட்டம்.

திருமதி க. இராஜினி — கிளிநொச்சி ம. வி. — வவுனியா மாவட்டம்.

திருமதி ம நடேசன்—கிளிநொச்சி ம.வி.—யாழ்ப்பாண மாவட்டம்.

நா. மதுரநாயகம் — வட்டக்கச்சி ம. வி. — முல்லைத்தீவு மாவட்டம்.

க. இரத்தினகுமார் — தருமக்கேணி அ.த.க.பா.—சாவகச்சேரி.

சி. வரதராஜா — பளை மத்திய கல்லூரி — பருத்தித்துறை.

ஆ. க. இரவீந்திரன் — பளை மத்திய கல்லூரி—சாவகச்சேரி.

திருமதி ம. அஞ்சலீனா — பளை மத்திய கல்லூரி —வவுனியா மாவட்டம்.

திருமதி க. நாகேஸ்வரன் பளை கணேசா வித்தி — முல்லைத்தீவு மாவட்டம்.

திருமதி வ. சிவகணேசசுந்தரன் — கிளிநொச்சி, வேம்போடுகேணி சி.சி.த.த.பா, [தற்காலிக இணைப்பு மூளாய் சைவப்பிரகாச வித்தி] — சங்கானை.

திருமதி சு. ரட்ணகுமார்— பளை மத்திய கல்லூரி—வவுனியா மாவட்டம்.

(தொடரும்)

# இரவு முழுவதும் மின்சாரம்வழங்க நடவடிக்கை

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் இயங்கிவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் இரவு நேரம் முழுவதும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாரம் முதல் இரவு நேரம் முழுவதும் வைத்திய சாலைக்கு மின்சாரம் வழங்கப்படும்.

இதுவரை காலமும் முன்னிரவும், அதிகாலையும், முற்பகலிலும் மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(இ-173)

# நேரத்துடன் மூடப்படும் அலுவலகங்கள்

தென்மராட்சிப் பகுதியில் இயங்கும் அரச அலுவலகங்கள் சில பகல் 1.00 மணியுடன் மூடப்பட்டு விடுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்த அலுவலகங்களுக்கு வரும் பொது மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி [illegible] றனராம்.

(இ-117)

## வல்லமைக்கு வந்தது சவால்; வலிய தோளை நிமிர்த்துவோம்!

ஆச்சி அடிக்கடி கூறுவாள்.
நானிருந்த வளவு
என்னுடன் ஏழுதலைமுறையை அறியுமாம்.
என்பேரன் கட்டிய கல்வீடு
நான்கு தலைமுறை கண்டது.
முற்றத்து வேம்பு மூன்று பரம்பரையைப்
பார்த்தது.

இப்படி நீளுமொரு வாழ்வுடன
பிணைந்திருந்தது அந்தப் பெருவளவு.
வெள்ளைப் பொழிகல்லுக் கிணறும்,
கற்தொட்டியும்
ஊரில் உயர்ந்திருந்த வகை கூறும்.
சுற்றம் புடை சூழவிருந்தோம்.
எம்மை அயலும்,
அயலை நாங்களும் ஆதரித்தோம்.
பங்குனி பிறந்து
திங்கட்கிழமை விழிதிறந்தால்...
''பன்றித் தலைச்சி' யிடம் நடப்போம்.
''சரவணமுத்தப்பா''
வண்டி கட்டிப் பட்டணம் போவார்.
சிறுப்பிட்டிவரை
அவருடன் சென்று திரும்புவோம்.
''தகரம் பிள்ளையார் கோவில்''
கொடியேறும்

பிறகென்ன?
அவருடன் கழியுமெம் பொழுது.
''கொத்தி ஒழுங்கை''க்குத் 'தார்' பூசியதும்
மின்சாரம் வந்ததுவும் எனக்குத் தெரியும்.
ஊருடன் இணைந்ததெம் வாழ்வு.
இழையறுந்து போகாத உறவு.
''1995 ஒக்டோபர் ஒன்று''
இப்படிப் புயலடித்து ஒதுங்குவோமென
எண்ணியிருக்கவில்லை.
அன்று ஞாயிற்றுக்கிழமை
திடீரெனத் தலையில் இடியிறங்கியது.
ஒருகணம் திணறிப் போனோம்.
ஊர் பிரிந்தோம்.
வைத்த அடியை எடுக்க மனமின்றிச்
செத்த சடமென நடந்தோம்.
''அந்திராணை'' வந்ததும் அழுகையே
வந்தது.

என் ''உரிமைச் சுடலை''
எங்கு போகின்றாய் என்றது.
பதிலேதும் கூறாது
மீண்டும் வருவேனென நெஞ்சிற் குறித்து
வழி நடந்தேன்.
பன்றித் தலைச்சியிடம் வந்தடைந்ததும்
ஒரு ஆறுதல்.
யார் யாரோ பொங்கி விட்டுப் போன
அடுப்புகள்

எம்மை ஆதரித்தன.
அகதியெனும் 'அந்தஸ்து'
இங்குவைத்தே எமக்கு வழங்கப்பட்டது.
எட்டிப் பார்த்தால் தெரியும் எம்மூர்புக
எமக்கு அனுமதி மறுக்கப்பட்டது.
தூரத்தே தெரிகிறது என்வீட்டுத் தென்னை.
வரும்பொழுது சிலிர்த்துக் கிடந்தது கத்தரி.
வயலெங்கும் பால்மணிப் பருவத்திலிருந்தது
பயிர்.

பட்டிப் பசுக்கள் மடிநிறைந்து நின்றன.
அகதியென்ற பெயரோடு
இங்கே நாமொரு ஒட்டுத் திண்ணையில்
இப்போ.

என்னோடு அன்று ஓடிவந்த உறவே!
எழுவோம்.
வல்லமைக்கு வந்தது சவால்;
வலியதோளை நிமிர்த்துவோம்!
நீயா நானா என்று பகைவன் கேட்கின்றான்.
ஊரையும் வீடடையும் தொலைத்துவிட்டு
உறங்கிக் கிடப்பது அழகல்ல.
நாங்கள் மனிதர்கள்,
அதிலும் தமிழர்கள்.
''புலிகள் படைக்கு' ஆட்கள் தேவையாம்
முழு உயரம்,
தோளளவு,
வயது,
பள்ளிப் படிப்புச் சான்றிதழ்
எதுவும் தேவையில்லை.
இனமானமுண்டேல் அது போதும்.
உமக்குண்டேல் வந்து சேருங்கள்.
எழுவோம்
பகை தொலைத்து எம் ஊர்புகுவோம்.

— புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**தாதி தேவை**

அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: டாக்டர் பொ. சொர்ண லிங்கம் M. B. B. S. (Cey), M. R. C. P. (U.K), மத்திய மகாவித்தியாலயம் வீதி, நெல்லியடி.

(39432)

**ஆங்கிலக் கல்வி**

சுலபமான முறையில் ஆங்கிலம் பேசப்பயில தனிப்பட்ட முறையிலும் பயிலலாம். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன், C/o. R. நடராசா, மணல் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சோமஸ்கந்தா நூல் நிலையம் அருகில்)

(39315)

**அறை வாடகைக்கு**

இளைப்பாறிய அரசாங்க அதிகாரி ஒருவர் குடியிருக்க அறை ஒன்று தென்மராட்சி, வடமராட்சிப் பகுதியில் தேவை. சாப்பாட்டுடன் விரும்பத்தக்கது. முற்பணமும் நல்ல வாடகையும் வழங்கலாம். இல. 503, C/o. உதயன் பணிமனை. இல. 9, நவீனசந்தை, சாவகச்சேரி.

(39312)


# பங்கீட்டு அட்டை விநியோக திட்டத்தில் மாற்றம் இல்லை

சாவகச்சேரி, டிச. 2

அனைத்து குடும்பங்களுக்குமான புதிய உலர்உணவு பங்கீட்டு அட்டைகளை விநியோகிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் வசதி கருதி புதிய உலர் உணவு பங்கீட்டு அட்டைகள் வீடு வீடாகச் சென்றே விநியோகிக்கப்படும் என்றும்—

(5 ஆம் பக்கம் பார்க்க)

# சீவல் தொழிலாளருக்கு வேலைவழங்க நடவடிக்கை

தென்மராட்சி, டிச. 2

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 5 ஆயிரம் சீவல் தொழிலாளர்கள் தமது தொழிலை இழந்துள்ளனர்.

இவர்களுக்கு தென்மராட்சி வடமராட்சி, வன்னி ஆகிய பகுதிகளில் தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுக்க யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்து வருவதாக சமாச பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (இ-11)

**மந்திகையில்**

# அங்காடிக் கடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை

வடமராட்சி, டிச. 2

யாழ். போதனா வைத்தியசாலை இயங்கும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியில் உள்ள அங்காடிக் (தற்காலிக) கடைகள்யாவும் விரைவில் அப்புறப்படுத்தப்படும்.

வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள அங்காடிக் கடைகள் சுகாதாரத்துக்கு கேடாக இருப்பதாகவும் —

எனவே அவற்றை உடன் அப்புறப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளு மாறும்— மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை நிர்வாகம் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளருக்கு அறிவித்துள்ளது.

(இ-173)


**கூட்டுறவாளர், ஆசிரியர்**

அமரர்

## இ. பொ. குமாரசுவாமி

(மறைவு: 15 — 11 — 1995)

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபரும், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னைநாள் தலைவரும், கோண்டாவில் ஐக்கிய பண்டகசாலையின் ஸ்தாபகரும், புகழ்பெற்ற கூட்டுறவாளரும், கல்விமானுமாகிய திரு. இ. பொ. குமாரசுவாமி அவர்களின் மறைவு கூட்டுறவுத் துறைக்கும், கல்வி உலகிற்கும் மிகுந்த ஓர் பேரிழப்பாகும். இவரை ஆசிரியர் உலகில் அறியாதவர்கள் மிகச் சிலரே. ஏனெனில் யாழ்ப்பாணத் தமிழ் ஆசிரியர் சங்கம், அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றில் சுமார் ஐந்து தசாப்தங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றியவர். இதைப் போன்று கூட்டுறவுத் துறையிலும் இவர், யாழ்ப்பாணத்தில் ஒரு முன்னோடியாவார். தமது இளம் வயதில் கோண்டாவிலில் ஒரு ஐக்கிய பண்டகசாலையைக் கூட்டுறவு அடிப்படையில் ஆரம்பித்த பெருமைக்குரியவர். கூட்டுறவில் இவருக்கிருந்த ஈடுபாடே இவரை நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பதவிக்கு உயர்த்தியது. அகில இலங்கை ரீதியிலும் இவர் கூட்டுறவில் ஈடுபட்டார். எப்பதவியை வகித்தாலும், அப்பதவியைத் திறம்பட நிர்வகிக்கும் ஆற்றல், அனுபவம் இவருக்கிருக்கிறது. எல்லோரையும் அரவணைத்துப் போகும் சாதுரியம் மிகுந்தவராகவே இவர் என்றும் விளங்கினார். கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் தமது வாழ்நாள் முழுவதும் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய இவர், அப்பாடசாலையின் தரத்தையும் உயர்வையும் என்றும் பேணி வந்துள்ளார். பாடசாலை இவரது காலத்தில் சகல துறைகளிலும் முன்னணி வகித்தது எனலாம். இவரது மறைவு கூட்டுறவுத் துறைக்கும், கல்வித் துறைக்கும் ஒரு பேரிழப்பு என்றே கூற வேண்டும்.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய

**பழைய மாணவர்கள்**

(39429)


## சேவாச்சிரம சிகிச்சை முகாம்

வடமராட்சி, டிச. 2

வடமராட்சி கிழக்கிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம் வைத்திய சிகிச்சை முகாம்களை நடத்தி வருகிறது.

கரவெட்டி அரசினர் கிராமிய வைத்தியசாலை டாக்டர் எம். யோகேஸ்வரன், நாகர்கோவில் மகாவித்தியாலய இடம்பெயர்ந்தோர் முகாம், செம்பியன்பற்று இடம்பெயர்ந்தோர் முகாம் ஆகியவற்றில் உள்ளோருக்கு வைத்திய சிகிச்சைகளை வழங்கினார்.

இச்சிகிச்சையின் போது நோயாளர்களுக்குரிய மருந்துகளை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம் வழங்கியது.

(இ-173)


இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி

அருள்மிகு

**லிங்கவிநாயகர் தேவஸ்தானம்**

(பழம் பிள்ளையார்)

## மணவாளக் கோல உற்சவம்

நிகழும் யுவவருடம் கார்த்திகைத் திங்கள் 17 ஆம் நாள் 3-12-95 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணிக்கு எம்பெருமானின் அருளை வேண்டி வல்வெட்டி வேவில் அருள்மிகு வீரகத்தி விக்கினேஸ்வரர் ஆலயத்தில் விசேஷ அபிஷேகமும் பூசையும் நடைபெறதிருவருள் கூடியுள்ளதால் அடியவர்கள் வருகை தந்து எம்பெருமானின் பெருங் கருணையை பெற்று ஏகுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இவ்வினம்

ச. வைத்தியநாதன்ஐயா
பரிபாலகரும் அர்ச்சகரும்
(லிங்கவிநாயகர் தேவஸ்தானம்)

தி. விக்கினேஸ்வரஐயா
ஆலய ஆதீனகர்த்தா
(வல்வெட்டி வேவில் விக்கினேஸ்வரர் ஆலயம்)

(39426)



## கண்ணீர் அஞ்சலி

இ. பொ. குமாரசுவாமி ஆசிரியர்
(கோண்டாவில்)

கோண்டாவில் இந்து மகா வித்தியசாலை முன்னாள் தலைமை ஆசிரியராகவும், கோண்டாவில் ஐக்கிய பண்டகசாலை முன்னாள் தலைவராகவும், நல்லூர் ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவராகவு ம்இருந்த

**இ. பொ. குமாரசுவாமி ஆசிரியர்**

15 - 11 - 95இல் தனங்கிளப்பில் மரணமாகி உள்ளார். அவரது மரணச் செய்தி கேட்டு வருந்துகிறேன்.

சி. புவனேத்திரன்

[39430]



## எயிட்லைன்ஸ்

★ மருத்துவ ஆய்வுகூடம் ★
★ பற்சிகிச்சை நிலையம் ★

யாழ்ப்பாணம் 193, மின்சாரநிலைய வீதி சாமி & கோ கட்டடத்தில் இயங்கிவந்த எயிட்லைன்ஸ் மருத்துவ ஆய்வுகூடமும், ஆரியகுளம் சந்தியருகில் 60, ஸ்ரான்லி வீதியில் இயங்கிய நடேசன் பற்சிகிச்சை நிலையமும் மந்திகை (மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அருகில்) சாவகச்சேரி வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

(சி/3115)



# மக்கள் வங்கி

## வாடிக்கையாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது பின்வரும் கிளைகள் கீழ்குறிப்பிட்டுள்ள இடங்களில் கடந்த 15-11-95 ஆம் திகதி முதல் வாடிக்கையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது சாவகச்சேரி கிளை கட்டடம்

1. யா/ நவீன சந்தைக் கிளை
2. யா/ கன்னாதிட்டிக் கிளை
3. காங்கேசன்துறைக் கிளை
4. ஊர்காவற்றுறைக் கிளை
5. சுன்னாகக் கிளை

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க கட்டடம்

1. யா/ ஸ்ரான்லிவீதிக் கிளை
2. யா/ பிரதானவீதிக் கிளை

வங்கி அலுவல் நேரம் 9.00 — 11.00 வரை

**காசோலைக் கொடுப்பனவுக்கான தடை உத்தரவு (STOP PAYMENT)**

மேற்படி கிளைகளில் நடைமுறைக் கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களால் பிறப்பிக்கப்பட்ட காசோலைகளுக்கு 30 - 10 - 95 ஆம் திகதிக்கு முன்பு தடை உத்தரவுகளை வழங்கி இருந்தால், அதனை செயற்படுத்த முடியாமல் இருக்கின்றோம் என்பதனை சகல வாடிக்கையாளர்களுக்கும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

மேற்படி உத்தரவுகளைத் தொடர்ந்தும் செயற்படுத்த விரும்பும் வாடிக்கையாளர்கள் தேவையான விவரங்களுடன் புதிய கடிதங்களை தங்கள் கிளை முகாமையாளர்களிடம் 15 - 12 - 95 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றார்கள். இத்திகதியின் பின் தடை உத்தரவுக் கடிதங்கள் கிடைக்கப் பெறாத கணக்குகள் யாவும் தடை உத்தரவுகள் அற்றவையாக கருதப்பட்டு எல்லா காசோலைகளுக்கும் பணம் வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

30 - 10 - 95 ஆம் திகதிக்கு பின்பு பிறப்பிக்கப்பட்ட காசோலைகளுக்கு தடை உத்தரவுகளை வழங்க விரும்பும் வாடிக்கையாளர்கள் உடனடியாக தங்கள் கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பிராந்திய முகாமையாளர், யாழ்ப்பாணம்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
மக்கள் வங்கி,
சாவகச்சேரிக் கிளை கட்டட மேல்மாடி,
30- 11- 95.

(சி/3121)



# இடமாற்றம்

## பொப்பியூலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

## T. R. குணசேகரன்

யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த இரு ஸ்தாபனங்களும் தற்காலிகமாக

பளை இராசா வெதுப்பகத்துக்கு அருகில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன

சகல வாகனங்களுக்கும் உரிய ரயர், ரியூப்புகள் (சைக்கிள் ரயர், ரியூப் உட்பட) எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

(39434)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தலையாரி யார்?

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் முதன்மையான அரசியல் தலைவர் யார்? நாட்டின் முக்கிய விவகாரங்களில் முடிவு எடுப்பதும், திட்டமிடுவதும் யார்? இப்படி ஒரு சந்தேகம், கேள்வி இப்போது அடிக்கடி எழுகிறது; இயல்பாகவே எழுகிறது.

அரசின் தலையாரி அனுருத்தவா அல்லது சந்திரிகாவா என்பதே அந்தக் கேள்வி.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் நடக்கும் போர் சம்பந்தமாகவும், தமிழர் விவகாரம் சம்பந்தமாகவும் தானே முடிவு எடுப்பவர் போல, அமைச்சர் அனுருத்தவின் அறிவிப்புகள் தொனிக்கின்றன.

பத்திரிகையாளர் மாநாடுகள், பொது வைபவங்களில் மட்டுமன்றி நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும்போதும் போர் சம்பந்தமாகவும், தமிழர் விவகாரம் தொடர்பாகவும் அனுருத்த முந்திரிக் கொட்டைத்தனமாக நடந்து கொள்கிறார்.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அனுருத்த பின்வருமாறு கூறியிருக்கிறார்:

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மூன்று கட்டத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது அதன் முதற்கட்டம். ஜனநாயக வரையறைக்குள் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது இரண்டாவது கட்டம் விடுவிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வது மூன்றாவது கட்டம்.

இதே அனுருத்த தான், சில நாள்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதோடு இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது தொடர்ந்து புதிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று சொன்னவர்.

இப்போது திட்டங்கள், கட்டங்கள் குறித்துப் பேசுகிறார்.

யாழ்ப்பாணத்தை, யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றி விடுவதால் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துவிட முடியாது என்று ஜனாதிபதி சந்திரிகாவே கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துவிட்டு, ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசித் தமது தீர்வைக் கொண்டுவருவது என்பது தான் அவரின் மூலத் திட்டம்.

விடுதலைப் புலிகளை சந்திரிகா நினைப்பது போல இலகுவில், குறுகிய காலத்தில் தோற்கடிப்பது சாத்தியமானதா என்பது வேறு விடயம்.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினாலும் சமாதானப் பேச்சுக்களை நடத்த முடியாது. மேலும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தை என்பதனையே, போரினூடாகச் சமாதானம் என்று மேனிமினுக்கிக் கூறிவந்தார் சந்திரிகா!

அப்படியாயின் புலிகளைத் தோற்கடிக்காமலே சமாதானப் பேச்சு என்ற அனுருத்தவின் அறிவிப்பு சந்திரிகாவின் மூலத்திட்டத்துக்கு நூறு வீதம் முரணானது.

இந்த முரண்பாடு சமாதானப் பேச்சின், அரசியல் தீர்வில், அரசுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதனைக் காட்டுகிறதா? அல்லது அனுருத்த அரசனை விஞ்சிய தளபதியாகும் நிலையைக் காட்டுகிறதா?

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக கனடாவில் ஆர்ப்பாட்டப் பேரணி

ரொரண்டோ, டிச. 2

கனடாவின் ரொரண்டோ நகரில் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை கனேடிய தமிழ்ச் சங்கங்கள் நடத்தின.

தமிழரின் சுயநிர்ணய கோரிக்கையை அங்கீகரிக்க கோரியும்—

உடன் யுத்தத்தை நிறுத்தக் கோரியும்— இந்தபேரணி நடத்தப்பட்டது.

கனேடிய தேசியக் கொடியும், தமிழீழக் கொடியும் பேரணியில் ஏந்திச் செல்லப்பட்டன.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படமும் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டது.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் வசந்தராஜா பேரணி முடிவில் உரையாற்றினார்.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணி தற்போது நகரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தடுப்பு மருந்துகள் தட்டுப்பாடாக உள்ள இவ்வேளையில் கட்டாக்காலியாக அலையும் நாய்களால் பொது மக்கள் கடிபடும் சம்பவம் அதிகரித்துள்ளதால்.

தமது வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறும்—

கட்டாக்காலிகளாக அலையும் நாய்கள் பிடிபட்டால் அவை அழிக்கப்படும் என்றும்—

சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## வித்துடல் விதைப்பு

சாவகச்சேரி, டிச. 2

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந் வீரவேங்கை அமுததவாணியின் (கந்தசாமி சர்மிளா — சுதுமலை அம்மன் கோவிலடி) வித்துடல் இன்று சனி பிற்பகல் 3 மணி வரை தென்மராட்சி கோட்ட செயலகத்தில் பெற்றோரின் வருகைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அதன் பின்னர் வித்துடல் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்படும். பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு புனித விதை குழியில் விதைக்கப்படும். (ஐ)

## திருட்டு

புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க கற்கோவளம் கிளையில் பூட்டை உடைத்து அரிசி, சீனி, பால்மா, மா போன்ற பொருள்கள் திருடப்பட்டுள்ளன. [இ-173]

# பாதுகாப்புக் கருதியே பரீட்சை பின்போடப்பட்டது

## ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, டிச. 2

பாதுகாப்பு நிலைமை காரணமாகவே யாழ்.குடாநாடு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை பின்போடப்பட்டது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ரசல் குணவர்த்தனா அறிவித்துள்ளார்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 37 ஆயிரம் பரீட்சார்த்திகளுக்கும் விரைவில் தனியான பரீட்சை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏனைய பகுதிகளில் எதிர்வரும் 4 ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகிறது.

# லங்கா கல்யாணி வருகிறது

சாவகச்சேரி, டிச. 2

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களுடன் ''லங்கா கல்யாணி'' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

ஆயிரம் மெற்றிக் தொன் மா, ஆயிரம் மெற்றிக தொன் அரிசி, 200 மெற்றிக் தொன் பால்மா, 200 மெற்றிக் தொன் பருப்பு ஆகியவற்றுடன் வரும் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை உடன் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

அதே வேளை—'ஹபரண' கப்பல் ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறை வரவிருக்கிறது. (இ-3)

# ஒரு லட்சத்து 81 ஆயிரம் மக்கள் வன்னி சென்றனர்

## வவுனியா அரச அதிகாரி தகவல்

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த ஒரு லட்சத்து எண்பதாயிரத்து 965 பேர் இதுவரை வன்னி பெருநிலப் பரப்புக்குச் சென்றிருப்பதாக வவுனியா மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாதபிள்ளை தெரிவித்திருக்கிறார்.

மாவட்ட ரீதியாக அவர் வெளியிட்ட இடம்பெயர்ந்த குடும்பங்களின் விவரம் பின்வருமாறு:-

★ கிளிநொச்சி:- 27 ஆயிரத்து 459 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 713 பேர்.

★ முல்லைத்தீவு மாவட்டம்:- 10 ஆயிரத்து 174 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 44 பேர்.

★ மன்னார் மாவட்டம்:- 3 ஆயிரத்து 59 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 520 பேர்.

★ வவுனியா மாவட்டம்:- 3 ஆயிரத்து 885 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 687 பேர். (ஐ)

# இடம் பெயர்ந்த வங்கி கிளைகளில் பணத்துக்கு பதிலாக காசுக் கட்டளைகள்

சாவகச்சேரி, டிச. 2

சாவகச்சேரியில் இயங்கும் இடம் பெயர்ந்த இலங்கை வங்கிக் கிளைகளில் பணம் வழங்குவதற்கு பதிலாக காசுக்கட்டளைகளே வழங்கப்படுகின்றன.

இடம் பெயர்ந்த இந்த வங்கிக் கிளைகளில் போதியளவு பணம் வைப்பில் இடப்படாத காரணத்தால் இந்த வங்கிக் கிளைகளால் பணம் வழங்க முடியவில்லை என்றும் —

வாடிக்கையாளர்கள் தமது கணக்கில் இருந்து காசுக்கட்டளை எடுக்கலாம் என்றும் — வங்கி அதிகாரி தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் காசோலை கிளை மட்டுமே வைப்பில் இடமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# தபால் ஊழியரில் பலர் கடமைக்கு திரும்பவில்லை

## தரம் பிரிக்கும் வேலை தாமதம்

சாவகச்சேரி, டிச. 2

சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ். பிரதம அஞ்சல் அலுவலக தபால்களை தரம் பிரிக்கும் வேலைகள் தாமதமடைவதற்கு யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் பலர் இன்னும் கடமைக்குச் சமூகம் அளிக்காததே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை கடமைக்குத் திரும்பி ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே போன்ற நிலையை வலிகாமத்தில் இருந்து தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்த ஏனைய தபாலகங்களும் எதிர் நோக்கி உள்ளன.

சூரியப்பிரகாசம் ராணுவ நடவடிக்கையின் போது இந்த ஊழியர்கள் தென்மராட்சி, வடமராட்சி மற்றும் கிளிநொச்சி போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்திருந்தனர்.

இப்படியானவர்களில் குறைந்த எண்ணிக்கையினரே கடமைக்குத் திரும்பி உள்ளனர்.

கடமைக்கு திரும்பாத அனைத்து ஊழியர்களையும் இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கடமைக்குச் சமூகம் அளிக்குமாறு பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. மாணிக்கவாசகர் பணித்துள்ளார்.

இது பற்றிய மேலதிக அறிவுறுத்தல்களை பெறவிரும்பும் ஊழியர்களை சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் தற்போது தற்காலிகமாக இயங்கும் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கோரி உள்ளார்.

# குடும்பஅட்டை பிரதிகளை பெறுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 2

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த போது குடும்பஅட்டைகளைத் தவறவிட்ட வலிகாமப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் குடும்ப அட்டைப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி குடும்ப அட்டைச் செயலகங்களில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் குடும்ப அட்டைப் பிரதிக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது என்றும்—

அத்துடன் கிராம சேவகரின் உறுதிப்படுத்தல் இன்றி விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்— போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு அந்தந்த பகுதி குடும்ப அட்டைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

## பங்கீட்டு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் எதுவித மாற்றமும் இல்லை என்றும் யாழ்.அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

புதிய உலர் உணவு பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கிராமசேவையாளரிடம் சென்று வீணாக அலைய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-3)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நடமாடும் மருத்துவச் சேவை

## கிளிநொச்சியில் இயங்குகின்றது

கிளிநொச்சி, டிச. 2

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 21பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மருத்துவப் பிரிவின் உதவியுடன் நடமாடும் மருத்துவச்சேவை ஒன்றை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நடத்தி வருகின்றனர்.

முகாம்களில் தங்கியுள்ள மக்களிடையே வயிறோட்டம் வயிற்றுளைவு, மலேரியா, சொறி, சிரங்கு, குருதிச் சோகை போன்ற நோய்கள் காணப்படுகின்றன.

இம்மருத்துவ சேவை தற்போது நடைபெறுவதால் நோய்கள் கட்டுப்பாட்டில் உள்ளன என்றும் —

மருத்துவ சேவையுடன், சுகாதாரம் சம்பந்தமான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் மக்களுக்கு மருத்துவபீட மாணவர்கள் வழங்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடமாடும் மருத்துவ சேவைக்கு தேவையான வாகனத்தை சர்வதேச கெயர் ஸ்தாபனமும், எம்.எஸ்.எவ். நிறுவனமும் சுழற்சி முறையில் வழங்கி வருகின்றன. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தச் செய்திகளைச் சேகரிக்க வந்த செய்தியாளர்கள் ஏமாற்றம்

## குடாநாடு வருவதற்கு அனுமதி இல்லை

கொழும்பு, டிச. 2

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போர் குறித்துச் செய்தி திரட்டுவதற்கென கொழும்பு வந்திருந்த பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டனர்.

பொஸ்னியா, றுவாண்டா போன்ற நாடுகளில் போர் நிலைமைகள் குறித்துச் சுதந்திரமாகத் தம்மால் செய்தி சேகரிக்க முடிந்ததாகவும் — இங்கே கொழும்பில் ஹோட்டல் அறைகளுக்குள் முடங்கிக் கிடந்துவிட்டுத் திரும்பவேண்டியுள்ளதாகவும் — அவர்களில் பலரும் உள்நாட்டுச் செய்தியாளர்களிடம் கூறிக் கவலைப்பட்டனர்.

அரசாங்கம் ''ஏற்பாடு செய்த'' விஜயத்திலாவது சென்று செய்தி திரட்ட முடியவில்லையே என்றும் சிலர் வேதனைப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் சிங்கக்கொடி ஏற்றும் வைபவத்துக்கு இந்த வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அழைத்து வரப்பட இருந்ததாகவும் — இரண்டு விமானங்கள் அடுத்தடுத்துச் சுட்டு வீழ்த்தப்பட்டதால் அந்த விஜயமும் ரத்துச்செய்யப்பட்டதாகவும் — கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு பத்து நாள்கள் கழிந்துவிட்டபோதிலும் சிங்கக்கொடியை ஏற்றக்கூடிய அளவுக்கு இராணுவம் இன்னும் யாழ். நகரின் மத்திய பகுதியைக் கைப்பற்றவில்லை. (அ)

### யாழ்ப்பாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தரப்பில் சினைப்பர் தாக்குதல் நடக்க, அடுத்த பக்கத்தில் கண்ணிவெடிகள் வெடித்து நாசத்தை உண்டாக்கும் பொஸ்னியா காட்சிகளைக் கொண்டதாகவே இருக்கிறது.

அரசாங்கம் தொலைக்காட்சியில் காட்டும் யாழ்ப்பாணத்துக் காட்சிகளில் இவை காட்டப்படுவதில்லை உண்மையான காட்சிகளை மக்கள் பார்க்க முடிவதில்லை — என்றும் அந்தம் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார். (அ)

## மந்திகையில் சிற்றூழியருக்கு உணவு அட்டை

யாழ்ப்பாணம், டிச. 2

மந்திகை அரசினர் வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு உணவு வழங்கும்முறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

உணவு பெறுபவர்களுக்கு உணவு அட்டை வழங்கப்பட்டுள்ளது.

உணவுக்கான அட்டை வைத்திருப்பவர்கள் மாத்திரமே உணவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இது இவ்வாறிருக்க இந்த உணவு அட்டை முறையை யாழ். போதனாவைத்தியசாலை ஊழியர்களிடமும் நடை முறைப்படுத்த நிர்வாகம் முற்பட்டதாகவும் சிற்றூழியர்கள் அதனை ஏற்க மறுத்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

### ஒரு முனைகளில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் யுத்தகளமாக மாறியிருப்பதாகக் களச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றைய சண்டை தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

எனினும் நேற்று நடந்த சமரில் 15 படையினர் பலியானதாகவும், நூற்றுக்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்ததாகவும் கொழும்பில் வெளியான செய்திகள் தெரிவித்தன.

எனினும் படையினருக்கு ஏற்பட்ட இழப்பு இதனைவிட அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நகரை நோக்கி முன்னேறும் முயற்சியில் முன்னணியில் ஈடுபட்டிருக்கும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தலைமையிலான விசேட கொமாண்டோக்களைக் கொண்ட 53 ஆவது படையணியே விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் இதுவரை மிக மோசமான இழப்புகளைச் சந்தித்திருக்கிறது.

இந்நிலையில் யுத்த களத்தில் உள்ள ஏனைய படையணிகள் குழப்பம் அடைந்திருப்பதாகக் களச் செய்திகள் தெரிவித்தன.

களத்தில் விடுதலைப் புலிகள் புதிய புதிய தந்திரோபாயங்களைக் கையாண்டு தாக்குதல் தொடுத்து வருவது படையினரைத் திணறடிக்கச் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### மண்ணெண்ணெய்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விதமான சீனியை மக்கள் வாங்கக் கூடாது என்றும் மேலும் இவ்வாறான சீனிவிற்பனைக்கு இருப்பின் சுகாதாரப் பகுதியினரின் கவனத்திற்கு கொண்டு வருமாறும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கா.த சிவபாதம் கோரி உள்ளார். [இ-18]

## பரீட்சை முடிவு

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ரஸல் குணரத்தினா தெரிவித்துள்ளார். (ஐ-6)

## படகை மறித்து படையினர் தாக்கினராம்

கொழும்பு, டிச. 2

மண்டைதீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சென்று கொண்டிருந்த படையினர் நேற்று மாலை 5 மணியளவில் படகு ஒன்றை இடைமறித்து அதன் மீது தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இத்தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது [ஐ]

## வடமராட்சி கிழக்கில் பாம்பு தொல்லை

செம்பியன்பற்று, டிச. 2

வடமராட்சி கிழக்கில் பாம்புத் தொல்லை அதிகரித்து வருகிறது.

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் வீட்டில் படுத்திருந்தபோது இளம் பெண் ஒருவர் பாம்புக் கடிக்கு உள்ளானார்.

தேவராகினி (16 வயது) என்ற இப்பெண் தற்போது மருதங்கேணி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார் (இ-36)

### படையினரின் ரோந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தும் இந்த பஸ்ஸை விடுதலைப்புலிகள் குண்டு வைத்து தகர்த்து விட்டதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பஸ்ஸை தகர்ப்பதற்கு சக்தி வாய்ந்த 50 கிலோ எடையுடைய குண்டு பயன்படுத்தப்பட்டதாக ''லங்கா தீப'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த 26 ஆம் திகதி இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. [ஐ-6]


மீண்டும்

போலியோ தடுப்பு மருந்து!

பெற்றோர்களே!

உங்கள் ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி போலியோ தடுப்பு மருந்து மீண்டும் வழங்கப்படவிருக்கிறது.

உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு இது மிக அவசியமானது...... தவறவிடாதீர்!

★ டிசம்பர் 9 ஆம் திகதியை நினைவில் கொள்ளுங்கள்


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னுத்துரை (1 - 12 - 95) நேற்று காலமானார்.

இவர் ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும், மதியாபரணம், சிவராசா (தபால் ஊழியர்), செல்வராசா, தேவராசா, ஜெயராசா (சுவிஸ்), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (2 - 12 - 95) இன்று காலை 10 மணிக்கு கரவெட்டி சோனப்பு மயானத்தில் இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
சிவராசா (சிவம்)
(மகன்)

வே. நமசிவாயம்
இலகடி வீதி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(39439)

கோண்டாவில்

### தம்பு நவரத்தினம்

(பிரபல வர்த்தகர் மாத்தறை)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் சபாபதி கனகராசா வீட்டில் வசித்தவரும் தற்போது பெருங்குளம் சந்தியைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தம்பு நவரத்தினம் அவர்கள் 1.12.95 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் கமலாதேவி, பத்மநாதன், தர்மேஸ்வரி, சறோஜினிதேவி (ஜேர்மனி), றஞ்சனாதேவி(ஜேர்மனி), மகேந்திரநாதன், ஜெகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமசேகரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சுபத்திராதேவி, கனகராசா, பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), சிவஞானம் (ஜேர்மனி), குமுதினி, பத்மினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி.க.குணசிங்கம்
பெருங்குளம் சந்தி,
சாவகச்சேரி.

ந.மகேந்திரநாதன்
(மகன்)
(வர்த்தகநிலையம் பெற்பதி றோட்)
சபாபதி – கனகராசா
(உரும்பிராய்)

(39437)


★ புதிய கிளை நிறுவனம் ★

இ. சுப்பிரமணியம்

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள், பாவனைப் பொருள்கள்

விற்பனை அகம்

இல. 8, காங்கேசன் நெடுஞ்சாலை, சுன்னாகம்.
இல. 77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆகிய முகவரிகளில் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வந்த எமது வாணிப நிலையம் தனது புதிய கிளை நிறுவனத்தை

புதிய அங்காடிக் கட்டடம்

கொடிகாமத்தில் (கொடிகாமம் சந்தி)

27 - 11 - 1995 இல் ஆரம்பித்துள்ளதனை அன்புக்குரிய வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்.

(39389)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 2-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org